

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 97

செவ்வாய்க்கிழமை
03 மார்ச் 2026

மாசி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## முல்லை. நீதிமன்றத்துக்கு பிரதம நீதியரசர் பயணம்!

முல்லைத்தீவு, மார்ச் 3
இலங்கை நீதித்துறையின் பிரதம நீதியரசர் பீரித்தி பத்தமன் சூரசேன நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்துக்குப் பயணம் மேற்கொண்டார்.
முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், கிளிநொச்சி மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி »11

உலகளாவிய போர்ப்பதற்றத்துக்கு மத்தியில்

# நாடாளுமன்றம் கூடுகிறது இன்று


போரில் சிக்கிய இலங்கையர்களை மீட்பது தொடர்பில் ஆராயப்படும்

கொழும்பு, மார்ச் 3
ஈரான் - அமெரிக்க மோதலால் உலகளாவிய போர்ப்பதற்றம் உருவாகியுள்ள சூழலில், ஸ்ரீலங்கா நாடாளுமன்ற அமர்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் ஆரம்பமாகவுள்ளன. »11

ஈரான் - அமெரிக்க மோதல்

## மூன்றாம் உலகப்போராக மாறும் சாத்தியம் அதிகம்

போரியல் நிபுணர்கள் எச்சரிக்கை



தெஹ்ரோன், மார்ச் 3
ஈரானுக்கும், அமெரிக்க - இஸ்ரேல் கூட்டுப்படைக்கும் இடையிலான போர், மூன்றாம் உலகப்போராக மாறுவதற்குச் சாத்தியங்கள் »11

## மிச்சம்மீதி இல்லாமல் டெல்அவிவ் அழியும்!

ஈரான் மிரட்டல்

தெஹ்ரோன், மார்ச் 3
இஸ்ரேலின் டெல் அவிவ் நகரம் மிச்சம் மீதி இல்லாமல் முற்றாக அழிக்கப்படும் என்று, ஈரானின் தேசிய பாதுகாப்புச்சபை திட்டவட்டமாக அறிவித்துள்ளது.
ஈரானின் உச்ச தலைவர் »11



## வடக்கில் பெற்றோல் தாராள விநியோகம்!

எனினும் நீள்கின்றது வரிசை

யாழ்ப்பாணம், மார்ச் 3
வடக்கு மாகாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்றும் பெற்றோல் விநியோகம் தாராளமாக இடம்பெற்றுள்ளது என்று துறைசார் »11

## இளைஞரின் சடலம் தூக்கிலிருந்து மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3
வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் உள்ள வீடொன்றில், தூக்கிலிருந்து இளைஞர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
29 வயதுடைய இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார். »11

யாழ்ப்பாணத்தில் உள்ள

## எரிபொருள் நிலையங்களுக்கு ம.எண்ணெய் வழங்கல் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தற்போது மண்ணெண்ணெய் தட்டுப்பாடு நிலவும் நிலையில், கணிசமான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இன்று மண்ணெண்ணெய் »11

## 150 வீத எரிபொருள்கள் கூடுதலாக விநியோகம்!

கொழும்பு, மார்ச் 3
எரிபொருள் விநியோகத்தை வழக்கத்தை விட ஒன்றரை மடங்கு அதிகரித்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறி »11



முச்சந்தி முரளி

"அரபு நாட்டு எண்ணெய்க் கிணறுகளை விட இஞ்ச தான் எரிபொருள் கூட பதுக்கியிருப்பினம் கண்டியளோ"

தையிட்டியில்

## ஆக்கிரமிப்பு விகாரையை உடனடியாக அகற்றுக!

பொதுமக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில் பொதுமக்களின் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை அகற்றப்பட்டு, அந்தக் காணிகள் மக்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர், பாதிக்கப்பட்ட பொதுமக்களுடன் இணைந்து மாதாமாதம் முன்னெடுக்கும் தொடர் »11

## தீவிர கண்காணிப்புக்குள் எரிபொருள் நிலையங்கள்

பொலிஸார் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 3
நாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் பொலிஸாரின் தீவிர கண்காணிப்பிலும், பாதுகாப்பிலும் உள்ளன என்று பொலிஸ் ஊடகப்பி »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 02.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4363
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 37 44 47 75
விசேட எழுத்து C

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 02.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1430
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 01 32 43 48

**NLB ஜய**
திகதி 02.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0389
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 0 3 5 0

**மெகா பவர்**
திகதி 02.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2469
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கங்கள் 06 25 44 49

**மஹஜன சம்பத**
திகதி 02.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6121
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 8 1 0 8 5 5

**தன நிதானய**
திகதி 02.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2151
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 04 16 25 75
விசேட எழுத்து K

**சுப தவசக்**
திகதி 02.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0237
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 36 55 64

**சுபிரி தன சம்பத**
திகதி 02.03.2026 தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0829
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கம் 0 5 9 3 1 5

**Super Ball**
திகதி 02.03.2026 தினம் திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3095
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கம் 04 23 35 42

**சனிதா**
திகதி 02.03.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கம் 26 42 57 69
வெற்றி வாரம் 5256

**SASIRI**
திகதி 02.03.2026 தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0925
வெற்றி இலக்கம் 20 22 49

**லக்ன ராசி**
திகதி 02.03.2026 தினம் திங்கட்கிழமை
மேஷம்
வெற்றி இலக்கம் 06 33 34 57
சீட்டிழுப்பு வாரம் 4807

**KAPRUKA**
திகதி 02.03.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 28
வெற்றி இலக்கம் 37 49 51 57
வெற்றி வாரம் 2271

**அத கோடிபதி**
திகதி 02.03.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கம் 14 27 36 73
வெற்றி வாரம் 2921

### எரிபொருளுக்கான

# வரிசைகள் கலையாவிட்டால் மீண்டும் கியூ.ஆர். முறைமை

## எரிசக்திப் பிரதி அமைச்சர் எச்சரிக்கை

**கொழும்பு, மார்ச் 3**

**பொதுமக்கள் எரிபொருளைப் சேமிக்கத் தொடங்கினால், மீண்டும் கியூ.ஆர். குறியீடு (QR code) முறை அறிமுகப்படுத்தப்படும் என்று எரிசக்திப் பிரதி அமைச்சர் முஹம்மது இலியாஸ் முஹம்மது அர்க்காம் எச்சரித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது- இலங்கையில் ஒரு மாதத்துக்கும் மேலதிகமாக தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது. தேவையற்ற அச்சம் காரணமாக, மக்கள் தங்களுக்குத் தேவையானதைவிட அதிகளவு எரிபொருளைச் சேகரித்தால், அது விநியோகச் செயற்பாடுகளைப் பாதிக்கும். மக்கள்தேவைக்கு அதிகமாக எரிபொருளைச் சேகரிக்கத் தொடங்கினால், விநியோகத்தை முறையாக நிர்வகிக்க நாம் மீண்டும்கியூ.ஆர். குறியீட்டு முறையை நாடவேண்டியிருக்கும். செயற்கையான தட்டுப்பாடுகளை உருவாக்குவதைத் தவிர்ப்பதுடன், மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். என்றார். (க-இ)

## சவுதி இலங்கையருக்கு தூதரகம் அறிவுறுத்தல்


கொழும்பு, மார்ச் 3
மத்திய கிழக்கில் இடம்பெற்றுவரும் போர்ச் சூழலைக் கருத்திற்கொண்டு, சவுதி அரேபியாவில் வசிக்கும் அனைத்து இலங்கையர்களையும் எச்சரிக்கையுடனும், விழிப்புடனும் இருக்க வேண்டும் என்று ரியாத்திலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

சவூதி அரேபிய அதிகாரிகள், ரியாத்திலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் ஜித்தாவிலுள்ள இலங்கைத் துணைத்தூதரகம் வழங்கும் உத்தியோகபூர்வத் தகவல்களை மட்டுமே பின்பற்ற வேண்டும். பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குப் பயணம் செய்வதைத் தவிர்ப்பதுடன், கடவுச்சீட்டு மற்றும் வதிவிட அடையாள அட்டை போன்ற முக்கியமான ஆவணங்கள் செல்லுபடியாவதை உறுதி செய்து, அவற்றை எளிதில் அணுகக்கூடிய வகையில் உடன் வைத்திருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலதிகத் தகவல்களுக்குத் தூதரகத்தின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களைப் பின்தொடருமாறும் ரியாத்திலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது. (க-இ)

## குவைத் இலங்கையர்கள் அஞ்சத் தேவையில்லை

### அந்த நாட்டுக்கான தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 3
குவைத்தில் தங்கியுள்ள இலங்கையர்கள் தொடர்பில் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் லக்ஷித ரத்நாயக்க தெரிவித்துள்ளார்கு வைத்தில் உள்ள அமெரிக்கப் படைத்தளங்களை இலக்குவைத்து ஈரான் தாக்குதல்களை நடத்தியுள்ள போதிலும், அந்தத் தாக்குதல்களினால் எந்தவொரு இலங்கையருக்கும் பாதிப்பும் ஏற்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். குவைத்தில் தங்கியுள்ள இலங்கையர்கள் தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் குவைத் பாதுகாப்புப் பிரிவின ருடன் இணைந்து நிலைமைகளை அவதானித்து வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மனைவி படுகொலை; கணவன் தலைமறைவு

கொழும்பு, மார்ச் 3
மாரவில, கட்டுநேரிய பேன்கட பிரதேசத்தில், வீட்டின் படுக்கையறையிலிருந்து பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பெண்ணின் கழுத்தில் படுகாயங்கள் காணப்படும் நிலையில், அவரது கணவன் தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்துக்குக் கிடைத்த தகவலை அடுத்து, பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது. குடும்பத்தகராறு காரணமாக இந்தப் பெண் படுகொலை செய்யப்பட்டிருக்காலம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

## ஈரானின் தாக்குதலில் இலங்கையரும் காயம்

கொழும்பு, மார்ச் 3
ஐக்கிய அரபு இராச்சியம் மீதான ஈரான் தாக்குதல்களில் இலங்கையர் உட்பட 58 பேர் காயமடைந்துள்ளனர் என்று ஐக்கிய அரபு இராச்சிய பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஈரானால் ஏவப்பட்ட ஏவுகணைகள் தங்களது வான் பாதுகாப்பு அமைப்புகளால் இடைமறித்து அழிக்கப்பட்டபோதும், அவற்றின் சிதறல்கள் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்ததில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 58 பேருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று அந்த நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)




## மத்திய கிழக்குக்கான விமானசேவை இரத்து

கொழும்பு, மார்ச் 3
மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள போர் மோதல்கள் காரணமாக, கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்கவிருந்த அனைத்து விமானசேவைகளும் நேற்றும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

போர் மோதல்கள் ஆரம்பித்த கடந்த 28 ஆம் திகதி முதல் இதுவரை, மத்திய கிழக்கிலிருந்து இலங்கைக்கு வரவிருந்த மற்றும் கொழும்பிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்கவிருந்த 115 விமான சேவைகள் முற்றாக இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று கட்டுநாயக்க விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### மத்திய கிழக்குப் போரால்

# தேயிலை ஏற்றுமதிக்கு நெருக்கடி ஏற்படலாம்!

## ஏற்றுமதியாளர்கள் அச்சம்

**கொழும்பு, மார்ச் 3**

**மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்ற நிலை தொடருமாயின் இலங்கை ஏற்றுமதித் துறையில் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

மேற்கு ஆசியா மற்றும் வட ஆபிரிக்காவில் உள்ள நாடுகளுக்கு இலங்கையிலிருந்து 50 முதல் 52 சதவீதமான தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆயினும் ஈரான் போன்ற நாடுகளுக்கே அதிகளவான தேயிலையை இலங்கை ஏற்றுமதி செய்கின்றது. இந்தநிலையில், மத்திய கிழக்கில் பதற்றம் தொடரும் நிலையில் தேயிலைஏற்றுமதிபாரியளவில் வீழ்ச்சியடையும் என ஏற்றுமதியாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (எ-இ)

## வல்வெட்டித்துறை இளைஞர் கொழும்பில் சடலமாக மீட்பு!

கொழும்பு, மார்ச் 3

கொழும்புத் துறைமுக நகர்க் கடற்பரப்பிலிருந்து ஆணின் சடலம் ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர். கடலில் சடலமொன்று மிதக்கின்றது என்று கொழும்புத் துறைமுகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர், வல்வெட்டித்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் கடந்த 28ஆம் திகதி கொழும்புத் துறைமுக நகரத்தில் நடைபெற்ற இசைநிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்வதற்காக வந்திருந்தார் என்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்புத் துறைமுகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)


## புதையல் தேடிய மூவர் கைது

கொழும்பு, மார்ச் 3

உடுதும்பர பிரதேசத்தில் தொல்பொருள்களைத் தேடும் நோக்கில் சட்டவிரோதமாக அகழ்வுப்பணிகளில் ஈடுபட்ட பெண் உட்பட மூவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். உடுதும்பர பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் இரு ஆண்கள் 45 மற்றும் 50 வயதுடையவர்கள் எனவும், சந்தேகநபரான பெண் 45 வயதுடையவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உடுதும்பர பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## விசேட சோதனைகளில் 602 சந்தேகநபர்கள் கைது



கொழும்பு, மார்ச் 3

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 602 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

30 ஆயிரத்து 166 பேர் சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் குற்றங்களுடன் தொடர்புடைய் 17 பேர் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 216 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 174 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மது போதையில் வாகனம் செலுத்திய 246 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 44 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## போதைப்பொருள்களுடன் 1,286 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மார்ச் 3

போதைப்பொருளைத் தடுக்கும் நோக்கில் 'முழு நாடுமே ஒன்றாக' என்ற தேசிய திட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் ஆயிரத்து 286 பேர் போதைப்பொருள்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயிரத்து 290 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், இருவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து, 428 கிராம் ஹெரோய்ன், 702 கிராம் ஐஸ், 5 கிராம் 785 மில்லிகிராம் கொக்கெய்ன், ஒரு கிலோகிராம் 450 கிராம் கஞ்சா, 2,129 கஞ்சாச் செடிகள், ஒரு கிராம் குஷ் ரக போதைப்பொருள், 400 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 278 போதைமாத்திரைகள், 849 கிராம் 440 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 600 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## கச்சதீவும் கச்சேரியும்

வருசத்துக்கு ஒருக்கா நடக்கிற கச்சதீவுத் திருவிழாவில ஏதோ ஒரு குளறுபடி நடக்கிறதும், அதுக்கு சப்பைக் கட்டு கட்டுறதும் யாழ்ப்பாணக் கச்சேரிக்காரருக்கு வழக்கமாப் போட்டுது. கச்சதீவு எண்டது தனிய எங்கட சனம் மட்டும் போய்வாற திருவிழா இல்லை. இந்தியாவில இருந்தும் ஆக்கள் வருவினம். அதோட யாழ்ப்பாணத்தில இருந்து தூரத்தில இருக்கிற தீவெண்டதால எல்லா ஏற்பாடுகளையும் பார்த்துப் பார்த்துச் செய்யாட்டி பிறகு திடீரெண்டு ஏதும் பொருளோ, உதவியோ தேவைப்பட்டால் ஒண்டுமே செய்யேலாமல் போடும். எல்லாரும் தலையைச் சொறிஞ்சு கொண்டிருக்க வேண்டியதுதான். இத்தனைக்கும் கச்சதீவுத் திருவிழாவுக்கு ரண்டு மாதத்துக்கு முதலே ஏற்பாட்டுக் கூட்டமெல்லாம் கச்சேரியில போட்டு, 'போனமுறை நடந்த பிழையள் என்ன? அதை என்னெண்டு தீர்க்கலாம்?' எண்டெல்லாம் சம்பந்தப்பட்ட டிப்பார்ட்மெண்ட் அதிகாரியளோட ஆராய்ஞ்சு, இந்தமுறை என்னென்ன ஏற்பாடுகள் செய்யோணும் எண்டு முடிவெடுப்பினம். கிட்டத்தட்ட ரண்டுமாதத்துக்கும் மேலா இப்பிடியெல்லாம் ஏற்பாடு செய்தும் இந்தமுறை தொடக்கத்திலேயே கச்சேரிக்காரர் சறுக்கி, சனத்தின்ர கோபத்துக்கு ஆளாகிட்டினம்.

கச்சதீவு அந்தோனியாரிட்டப் போறதுக்கெண்டு போன சனிக்கிழமை விடியப்பிறமே குறிகாட்டுவான் ஜெற்றியில சனங்கள் குவியத் தொடங்கிட்டுதுகள். ஆனால் அந்தச் சனத்தை ஏத்துறதுக்கு படகுகளுக்குத் தட்டுப்பாடு. இருக்கிற படகுகளை வைச்சு முன்னுக்கு நிண்டவையை ஏத்திக் கொண்டு போட்டினம். ஒரு ஆயிரம் பேருக்கும் மேல படகில்லாமல் அங்கேயே நிக்கவேண்டிய சூழல். குறிகாட்டுவானில இருந்து கச்சதீவுக்குப் போன படகுகள் திரும்ப வாறதெண்டால், பத்துமணித்தியாலத்துக்கு கிட்டப் பிடிக்கும். அதோட பத்துமணித்தியாலம் தொடர்ந்து ஓடின படகுகளுக்கு ஒரு ஓய்வு குடுக்காமல் திரும்ப கச்சதீவுக்கு ஏத்துறதும் சிக்கலாயிடும். அதால வேற படகுகள் கிடைக்குமோ எண்டு அதிகாரிமார் ஓடியாடித் திரிஞ்சவை. எண்டாலும் படகுகள் கிடைக்கேலை. அதால காலமை எட்டுமணிக்கு குழந்தை குட்டியளோட போன சனங்கள் சாப்பாடு தண்ணியில்லாமல் அந்த வெயிலுக்க, பொழுதுபட அஞ்சரை மட்டும் தவிச்சபடி இருந்திருக்கினம். அவையை கச்சதீவுக்கு கூட்டிக்கொண்டு போக ஏலுமோ. இல்லையோ? எண்டு ஒரு உறுதியான முடிவையும் அதிகாரிமார் சொல்லவும் இல்லை. பிறகு கடைசியா கச்சதீவுக்கு முதல் ஆக்களை ஏத்திக்கொண்டு போன படகுகள் திரும்பி வந்து தான், மிச்சச் சனத்தை இரவு ஆறுமணி போல ஏத்திக்கொண்டு போய், அவை கச்சதீவில கால் வைக்கவே நடுச்சாமம் தாண்டிட்டுது.

'நாங்கள் ஒரு ரண்டாயிரம் மூவாயிரம் பேர்தான் வருவினம் எண்டு எதிர்பார்த்தம். ஆனால் ஐயாயிரம் பேருக்கும் மேல வந்ததால தான் இப்பிடி நெருக்கடி வந்தது' எண்டு கச்சேரிக்காரர் சொல்லுகினம். ஆனால் அந்தச் சாட்டை ஆரும் ஏற்றுக்கொள்ளமாட்டினம். கச்சதீவுத் திருவிழாவுக்கு இவ்வளவுபேர்தான் வருவினம் எண்டு சும்மா ஒரு கைக்குத்துக்கணக்குப் போடேலாது. ஏனெண்டால் அந்தத் திருவிழாவுக்கு போய் வாறதில ஆயிரத்தெட்டு இடைஞ்சல்கள் இருக்கும். அதையெல்லாம் முதலே ஊகிக்கவேணும். அப்பிடி சரியா ஊகிக்கமுடியாட்டி அதுக்கேத்த பொறிமுறையளைப் பாவிக்கத் தெரியோணும். கச்சதீவுக்குப் போறவைக்கு கச்சேரிக்காரர் 'ஒன்லைனிலையும்' பிரதேச செயலகங்கள் மூலமும் விண்ணப்பங்களைக் குடுத்து, அப்பிடி விண்ணப்பிச்சவை மட்டும் தான் கச்சதீவு போகலாம் எண்டு ரண்டு மாதத்துக்கு முதல் அறிவிச்சாலே எத்தினைபேர் வருவினம் எண்டு சரியா அறிஞ்சு கொள்ளலாம். அதுக்கேத்தபடி படகுகளையும், சாப்பாட்டையும், தண்ணியையும் மற்ற வசதியளையும் குறைவில்லாமல் செய்யலாம். ஆனால் இன்னும் தங்கட ஊகப்படி கணக்குப்போட்டால் இப்பிடித்தான் சறுக்கும் எண்டதை கச்சேரிக்காரர் இனியாவது உணருவினமோ?

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்குப் போர் நீடித்தாலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது!



## அரசாங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 3**

**மத்திய கிழக்கில் போர் நீடித்தாலும் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. எனினும், சர்வதேசச் சந்தையின் விலைக்கேற்ப விலைகளில் மறுசீரமைப்பு இடம்பெறக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஆகியோர் இணைந்து நேற்று விசேட ஊடக சந்திப்பொன்றை நடத்தினர்.

அதில் கருத்து வெளியிட்ட அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, " நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற தேவையற்ற அச்சத்தால் மக்கள் எரிபொருள் சேகரிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

நாட்டில் தேவையானளவு எரிபொருள் இருப்பில் உள்ளது. எமது நாட்டுக்கு வரும் எரிபொருள் கப்பல்கள் மத்திய கிழக்கு ஊடாக அல்ல, வேறு வழிகளில்தான் வருகின்றன. எனவே, விநியோகம் பாதிக்கப்பட மாட்டாது" - என்றார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் கருத்து வெளியிடுகையில், "மத்திய கிழக்கு இல்லாவிட்டால் அமெரிக்கா மற்றும் நைஜீரியா எரிபொருளை நோக்கிச் செல்லலாம்.

அதற்குரிய ஏற்பாடு முன்னெடுக்கப்படும். போர்ச் சூழ்நிலையால் உலக சந்தையில் விலையேற்றம் இடம்பெற்றால் அதற்குரிய மறுசீரமைப்பு நடவடிக்கை இடம்பெறும்" - என்றார். (எ-44)

# எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு வாய்ப்பில்லை

## ரணில்

கொழும்பு, மார்ச் 3

ஈரானிடம் இருந்து எண்ணெய் கிடைக்காவிட்டாலும் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களுடன் நடத்திய சந்திப்பொன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈரானை விடவும் ஏனைய நாடுகளிடம் இருந்தே இலங்கை அதிகளவு எரிபொருளைப் பெற்றுக் கொள்கின்றது. ஈரான் ஒருவேளை ஹோர்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்தைத் தடுத்தால் மட்டுமே பிரச்சினைகள் ஏற்படும். ஆனால் தற்போது அவ்வாறான சூழல் ஏற்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# உதைபந்தாட்டத் தொடரில் சென்.பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 3

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம், யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய 12 வயதுப் பிரிவினருக்கான Future Soccer Kings "SAHAYARAJAH CHALLENGE TROPHY" கிண்ணத்துக்கான போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது. யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், நெல்லியடி மத்திய கல்லூரிக்கும் இடையில், இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில், நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற முதலாவது குழுப் போட்டியில் (Leaque) தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை 8:0 என்ற கோல் கணக் கிலும், இரண்டாவது போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை 1:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்று குழுச் சம்பியனானது. காலிறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரியை 2:0 என்ற கோல் கணக்கிலும், அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை 4:0 என்ற கோல்கணக்கிலும் வெற்றி பெற்றிருந்தது. (க)


# மரண அறிவித்தல்



பிறப்பு 30 . 08 . 1959

இறப்பு 02 . 03 . 2026

(CS/47254) J-1

## சுந்தரலிங்கம் இந்திராணி

பெருங்குளம் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், துர்க்கை அம்மன் கோவிலடி நுணாவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் இந்திராணி அவர்கள் நேற்று (02.03.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவசுப்பிரமணியம், ஆனந்தராசா, கனகசபாபதி, செல்வரத்தினம், செல்வராணி, இராசேந்திரம், பவானி, பவளராணி, மகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேரின்பநாயகி, பேரின்பநாதன், காலஞ்சென்ற தருமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், லிங்கேஸ்வரன், காலஞ்சென்ற கோமளேஸ்வரி மற்றும் லிங்கேஸ்வரி, சர்வேஸ், மோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நிறோஜினி, அற்புதராசா, ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிசனா, அபிசன், அஸ்விகா, சுபானுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

துர்க்கை அம்மன் கோவிலடி, நுணாவில் மத்தி.


# இலங்கை கிரிக்கெட் அணியின் தோல்வியை எதிர்த்துப் போராட்டம்

கொழும்பு, மார்ச் 3

இலங்கை கிரிக்கெட் அணியின் தொடர் தோல்விகளைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் தலைமையகத்துக்கு முன்பாக கடந்த சனிக்கிழமை எதிர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தற்போது நடைபெற்றுவரும் 2026 ஐ.சி.சி. டி 20 உலகக் கிண்ணத் தொடரில், இலங்கை அணி சுப்பர் 8 சுற்றில் நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளிடம் தோல்வியடைந்து அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.

இந்தத் தொடர் தோல்விகளால் ஆத்திரமடைந்த ரசிகர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் ஏனைய அதிகாரிகள் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என இதன்போது கோஷங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டம் காரணமாக கொழும்பு கிரிக்கெட் தலைமையகத்துக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை





## பொய்யாமொழி

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு**


**பொருள்:** மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர்; நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்லணிகலம் என்றும் கூறுவர்.

# மீண்டும் கியூ.ஆர்.முறைமை தேவை

மத்திய கிழக்கில் மூண்டுள்ள போர் மேகங்கள், இலங்கை மக்களின் மனதில் பழைய 'வரிசை யுகத்தின்' கசப்பான நினைவுகளை மீண்டும் கிளறிவிட்டுள்ளன. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் மக்கள் எரிபொருள் நிலையங்களில் முண்டியடிப்பதும், அதைச் சாதகமாக்கிச் சில சக்திகள் பதுக்கலில் ஈடுபடுவதும் துரதிர்ஷ்டவசமானது. மே மாதம் வரை தேவையான எரிபொருள் கையிருப்பில் உண்டு என எரிபொருள் கூட்டுத்தாபனம் அளிக்கும் உறுதிமொழிகள் ஒருபுறமிருக்க, மக்களின் இந்தத் தன்னிச்சையான அச்சத்தை வெறும் ஊடக அறிக்கைகளால் மட்டும் தடுத்துவிடமுடியாது என்பதைக் கடந்த கால அனுபவங்கள் நமக்குக் கற்றுத்தந்துள்ளன. கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில், ஒரு லீற்றர் பெற்றோலுக்காகத் தவம் கிடந்ததும், மருந்துக்கும் எரிபொருள் இன்றி நாடு ஸ்தம்பித்ததும் அத்தனை விரைவாக மறந்துவிடக்கூடியவை அல்ல. அந்த இருண்ட காலத்திலிருந்து, வரிசை யுகத்திலிருந்து நாட்டை ஓரளவு மீட்டெடுத்த பெருமை, ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 'கியூ.ஆர்.' முறைமைக்கே உண்டு.

தொழில்நுட்ப ரீதியில் மிகவும் எளிமையான, அதேசமயம் நிர்வாக ரீதியில் ஆகச்சிறந்த வெற்றியைத் தந்த அந்தத் திட்டம், எரிபொருள் விநியோகத்தில் நிலவிய குளறுபடிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஒவ்வொரு வாகனத்துக்கும் குறிப்பிட்ட அளவு எரிபொருள் என்பதை உறுதி செய்ததன்மூலம், பதுக்கல் பேர்வழிகளின் ஆட்டம் அடங்கியது; அத்தியாவசியத் தேவைகளுக்காக வீதிக்கு வந்தவர்கள் மணிக்கணக்கில் வரிசையில் நிற்கவேண்டிய அவலமும் நீங்கியது. நாடு ஓரளவுக்குச் சுமுக நிலைக்குத் திரும்பியவுடன் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது, இன்று திரும்பிப் பார்க்கையில் கியூ.ஆர். முறைமையை நீக்கியமை ஒரு வரலாற்றுத்தவறு என்றே தோன்றுகிறது. ஒரு நெருக்கடி வரும்போது மட்டும் தற்காலிகத் தீர்வுகளைத் தேடாமல், எதிர்காலப் பாதிப்புகளிலிருந்து நாட்டைப் பாதுகாக்க கியூ.ஆர். முறைமையை நிரந்தரமான ஒரு பாதுகாப்புப் பொறிமுறையாக மாற்றுவதே புத்திசாலித்தனமான செயலாகும்.

தற்போது நிலவும் மத்திய கிழக்கு போர்ச்சூழலோ அல்லது வருங்காலத்தில் ஏற்படக்கூடிய ஏதேனும் ஒரு பொருளாதாரச் சிக்கலோ, எரிபொருள் விநியோகத்தைப் பாதிக்கும் என்று அச்சம் எழும் போதெல்லாம் மக்கள் வரிசையில் நிற்பது நாட்டின் உற்பத்தித்திறனைப் பாதிக்கும். எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதும், புலனாய்வுப் பிரிவினரை ஏவிப் பதுக்கல்களைத் தேடுவதும் ஒரு தற்காலிகமான தடுப்பு முறை மட்டுமே. மாறாக, கியூ.ஆர். முறைமையைத் மீண்டும் அமுல்படுத்தி, அதனைத் தேசிய விநியோகக் கட்டமைப்பின் ஒரு அங்கமாக மாற்றினால், பதுக்கல் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் போகும். டிஜிற்றல் முறைமையிலான விநியோகம் என்பது வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதுடன், தேவையற்ற அச்சத்தையும் தேவையற்ற வரிசைகளையும் நிரந்தரமாக இல்லாது ஒழிக்கும். எனவே, மீண்டும் ஒரு வரிசை யுகத்துக்குள் நாடு தள்ளப்படக்கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருந்தால், கியூ.ஆர். எனும் தொழில்நுட்பக் கேடயத்தை மீண்டும் கையில் எடுப்பதே தார்மீகமான வழியாகும்.



## ஆரோக்யா செயற்றிட்டத்திலிருந்து விலகும் அரச மருத்துவ அதிகாரிகள்

**கொழும்பு, மார்ச் 3**
**சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ள 'ஆரோக்யா' செயற்றிட்டத்திலிருந்து விலகுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் ஹம்சமால் வீரசூரிய தெரிவித்துள்ளதாவது-
இந்த ஆரோக்யா செயற்றிட்டம் என்றால் என்ன? இதன் பின்னணியில் உள்ள நோக்கம் என்ன? என்பது எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. இது அரசியல் நோக்கத்துக்காகச் செய்யப்படும் ஒரு வேலை என எமக்கு நியாயமான சந்தேகம் உள்ளது. மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத் துறையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில்லை என்பதை உறுதிப்படுத்திவிட்டு, பிரச்சினை இல்லாத இடங்களில் சுயலாபம் தேடுகின்றனர். எனவே, எந்த விபரங்களும் தெரியாத, அரசியல் முகமூடி அணிந்த இவ்வாறான செயற்பாடுகளில் பங்கேற்பதில்லை என்று சங்கத்தின் மத்திய குழு தீர்மானித்துள்ளது என்றார். (க-இ)

## இந்த ஆண்டில் மட்டும் 13,416 பேருக்கு டெங்கு

*நால்வர் பேர் உயிரிழப்பு*

கொழும்பு. மார்ச் 3
இந்த வருடத்தில் இதுவரை 13 ஆயிரத்து 416 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் மருத்துவர் பிரஷிலா சமரவீர தெரிவித்துள்ளார். கொழும்பு மற்றும் கம்பஹா காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும், அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே பொது மக்கள் இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின், உடனடியாகத் தகுதிவாய்ந்த மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (க-இ)




## வவுனியாவில் பனிமூட்டம்

வவுனியா, மார்ச் 3
நாட்டின் மேற்கு, சப்ரகமுவ, மத்திய, தெற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், அநுராதபுரம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. அதேவேளை கடற்பரப்புகளில் மாறுபட்ட திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 2030 கிலோமீற்றர் வரை காணப்படும் என்றும் எதிர்வு கூறியுள்ளது. (க-இ)




## இரு விபத்துகளில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 3
நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டு விபத்துகளில் பெண்ணொருவரும், ஆணொருவரும் உயிரிழந்துள்ளனர்.
களுபோவில தெஹிவளை வீதியில், தெஹிவளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், எதிர்த்திசையிலிருந்து வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்துக்குள்ளானது. அதில் மூவர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதேவேளை, மதவாச்சி கெப்பித்திகொல்லேவ வீதியின் ஹீரல்லுகம பிரதேசத்தில், ஹீரல்லுகம நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், எதிர்த்திசையிலிருந்து வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. அதில் நால்வர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். (க-இ)

## வீட்டு வசதி, சொத்துக்கடனின் அதிகபட்ச எல்லை அதிகரிப்பு

அரச ஊழியர்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வந்த வீட்டு வசதி மற்றும் சொத்துக் கடன்களுக்கான அதிகபட்ச எல்லை 50 இலட்சம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய நடைமுறை 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைய நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதற்கான சுற்று நிருபம் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டாரவால் வெளியிடப்பட்டுள்ளது. பொருளாதாரச் சூழல் மற்றும் கட்டுமானச் செலவுகளைக் கருத்திற்கொண்டும் அரச ஊழியர்களின் நலன்கருதியும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள்

வடமராட்சி, மார்ச் 3
விசேட போதை ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தின்கீழ் அவசர தொலைபேசி இலக்கம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர் ஒட்டும் செயற்பாடு பருத்தித்துறைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது.
பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டு, முச்சக்கரவண்டிகளில் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.
பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க, போக்குவரத்து தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி உப்புல் ஆனந்த அதிகாரி, பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொலிஸார் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (எ-100)

## சட்டவிரோத மணலகழ்வு; முன்னாள் 'ஜி.எஸ்.' கைது

கொழும்பு, மார்ச் 3
ஹொரவ்பொத்தானை, கப்பு கொல்லேவப் பதவி காப்புக் காட்டில், சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், ஓய்வு பெற்ற கிராம அலுவலர் ஒருவர், வாகனங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கப்புகொல்லேவ, துடுவெவப் பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து, குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (க-இ)

## தாழ்ச்சி உயர்ச்சியின் படிக்கல்

ஆளுமை செய்வோர், அதிகாரத்திலுள்ளோர், தலைமை தாங்குவோர் சட்டங்களை இயற்றுவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும், மேற்பார்வை செய்வதிலும் குறியாக இருப்பார்கள். சொல்வார்கள், செயலில் காட்டமாட்டார்கள். சுமத்தற்குரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் வைப்பார்கள். ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக்கூட முன்வரமாட்டார்கள். முதன்மையான இருக்கைகளையே விரும்புவார்கள்.

'ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்.'(மாற் 9:35)

பெயர், புகழ், பதவி, அதிகாரம், செல்வம் என்பன இறையரசின் மதிப்பீடுகளுக்கு எதிரானவை. இருந்தாலும் உலகியலில் மயங்கி மனிதஅறிவு மழுங்கிப் போய் கிடக்கிறது. இறைவன் தந்த மேற்படிக் கொடைகளைத் தனக்கே தக்கவைத்து தன்நிலை உயர்த்தப் பயன்படுத்துவதை விடுத்து மக்கள் நலனுக்கு பயன்படுத்தும்போது நற்பெயரும், மதிப்பும் தானாக வந்துசேரும். வறட்டுக் கௌரவத்தை மூடை கட்டிவைத்து விட்டு மனிதநேயமே பெரிதென்று களத்தில் இறங்கிப் பணியாற்றுவோம். போட்டி, பொறாமை, கோபம், சாதி, மத, மொழி பேதங்களை விடுத்து எல்லோரும் இறைசாயலான மக்கள் என்பதை ஏற்று இறையரசைக் கட்டியெழுப்பும் சிற்பிகளாக வாழ்வோம்.

'தம்மைத்தாமே உயர்த்துபவர் எவரும் தாழ்த்தப் பெறுவர். தம்மைத் தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப் பெறுவர்'

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 3
மேல் மருவத்தூர் பங்காரு அம்மா அடிகளின் அவதாரதினத்தை முன்னிட்டு, ஊரெழுகணேச வித்தியாசாலையில் தெரிவுசெய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு, கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை குப்பிழானைச் சேர்ந்த கலைச்செல்வி திருக்குமார் குடும்பத்தினர் (சுவிஸ்) வழங்கியுள்ளனர். (க)



## கூட்டுறவு முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்.மாவட்ட பனை, தென்னை வ.அ.சவ.ச. சமாசத்தின் ஏற்பாட்டில், ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் பராமரிப்பின்கீழ் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு கடந்த வியாழக்கிழமை சமாசக் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.
சமாசத்தலைவர் சி.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற செயலமர்வை, சுவட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் ஆரம்பித்துவைத்ததுடன், கல்வி மற்றும் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் விரிவுரையாற்றினர். (க-17)



## திடீரெனத் தீப்பிடித்த மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், மார்ச் 3
மருதனார்மடத்தில் நேற்று மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளது. மோட்டார் சைக்கிள் தீப்பிடித்தமைக் கான காரணம் தெரிய வரவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (எ-27)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புக்கொடுப்பார்கள்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச் செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால்சிலர் கடன் வாங்கவும் நேரிடும்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரானுக்கு பதிலடி கொடுக்க வளைகுடா நாடுகள் திட்டம்!

லண்டன், மார்ச் 3

ஈரானின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்குத் தகுந்த பதிலடி கொடுப்பதற்கான திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன என்று வளைகுடா நாடுகள் அறிவித்துள்ளன.

சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய வளைகுடா ஒத்துழைப்பு சபை இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் பதற்றத்தைத் தணிப்பதற்காகப் பலகட்ட தூதரக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அவற்றையெல்லாம் மீறி ஈரான் தொடர்ந்து தாக்குதல்களை நடத்திவருகிறது. எங்களது நாடுகளின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை விடயத்தில் எவ்வித சமரசத்துக்கும் இடமில்லை. ஈரானின் இந்த அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவுள்ளோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் தற்போது நிலவும் போர்ப் பதற்றங்களுக்கு மத்தியில், வளைகுடா நாடுகளின் இந்தத் திடீர் அறிவிப்பு பிராந்திய நிலைமையை மேலும் தீவிரமடையச் செய்துள்ளது. (எ-இ)



# ஈரானுக்கு எதிரான போர் நான்கு வாரங்கள் நீடிக்கும்

### அமெரிக்க ஜனாதிபதி தெரிவிப்பு



**நியூயோர்க், மார்ச் 3**

**ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் நான்கு வாரங்கள் வரை நீடிக்கலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

பிரிட்டனின் 'டெய்லி மெயில்' இதழுக்கு அளித்த நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த இராணுவ நடவடிக்கை நான்கு வாரங்கள் அல்லது அதற்கும் குறைவான காலத்திலேயே நிறைவடையக் கூடும். ஈரான் ஒரு பெரிய நாடு என்பதால், அதன் வலிமைக்கு ஏற்ப இந்த கால அவகாசத்தைக் கணக்கிட்டுள்ளேன். அதேசமயம், ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான கதவுகள் இன்னும் திறந்தே இருக்கின்றன. ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் இராணுவநடவடிக்கைகள் அதன் அனைத்து இலக்குகளையும் எட்டும் வரை முழுவீச்சில் தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள காணொளிச் செய்தியில், ஈரானுடனான இந்த மோதலில் இதுவரை மூன்று அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளார். அமெரிக்கத் தரப்பில் கூடுதல் உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளன என்று தெரிவித்துள்ள அவர், இறுதியில் இந்த நடவடிக்கை உலகுக்கு ஒரு நன்மையாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார். பென்டகன் தகவலின்படி, மூன்று வீரர்கள் கொல்லப்பட்டதுடன், ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர். (எ-இ)

## 24 மணிநேரத்தில் 1,000 இலக்குகள்

நியூயோர்க், மார்ச் 3

அமெரிக்க மத்திய கட்டளையகம் மேற்கொண்டுவரும் தற்போதைய இராணுவ நடவடிக்கையின் முதல் 24 மணிநேரத்துக்குள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலக்குகள் வெற்றிகரமாகத் தாக்கப்பட்டன என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இராணுவ நடவடிக்கை தொடர்பான மேலதிக விவரங்கள் மற்றும் சேத விவரங்களை அமெரிக்க மத்திய கட்டளையகம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## ஐரோப்பிய நாட்டின் மீதும் ஈரான் தாக்குதல்

லண்டன், மார்ச் 3

சைப்ரஸில் உள்ள பிரிட்டனின் வானூர்தித்தளம் மீது ஈரான் ஆளில்லா வானூர்தி தாக்குதல் நடத்தியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஐரோப்பிய நாடொன்றின் மீது ஈரான் நடத்திய முதலாவது தாக்குதல் இதுவாகும். இந்தத் தாக்குதலில் குறைந்த அளவிலான சேதம் ஏற்பட்டது என்றும், உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் சைப்ரஸ் அதிகாரிகளை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-இ)

## லெபனானின் மீது இஸ்ரேல் தாக்குதல்

### 31 பேர் உயிரிழப்பு

பெய்ரூட், மார்ச் 3

பெய்ரூட் மற்றும் தெற்கு லெபனான் பகுதிகளை இலக்குவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 31 பேர் உயிரிழந்துள்ளனர் என்று லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. முதற்கட்டத் தகவல்களின்படி 31 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 149 பேர் வரை காயமடைந்துள்ளனர் என்றும் லெபனான் சுகாதார அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. சர்வதேச ஊடகங்களை மேற்கோள்காட்டி இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)



## பதில் தாக்குதல்களை தீவிரமாக்கியது ஈரான்

### பல நாடுகளின் மீது ஏவுகணைத் தாக்குதல்

தெஹ்ரான், மார்ச் 3

மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீதும், இஸ்ரேலின் பிரதான நகரங்களின் மீதும் ஈரான் தனது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளது. ஈரான் தனது ஹைப்பசொனிக் ஏவுகணைகள் மூலம் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரானின் உச்ச தலைவர் அய்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக, ஈரான் இராணுவம் 'உண்மை வாக்குறுதி 4' எனும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக, ஐக்கிய அரபு இராச்சியத்தின் அல்ருவைஸ் பகுதியில் உள்ள அமெரிக்காவின் அதிநவீன ஏவுகணை எதிர்ப்பு ரேடார் தளம் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது என்று ஈரான் அறிவித்துள்ளது. இந்தியப் பெருங்கடலில் பயணித்த அமெரிக்கக் கடற்படையின் எரிபொருள் கப்பல் மீதும் ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதில் அது செயலிழந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. குவைத் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்களையும் இலக்குவைத்துத் தாக்குதல் நடத்தப்படும் என்றும் ஈரான் எச்சரித்துள்ளது. குவைத்திலுள்ள அமெரிக்கத் தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 3 அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளதுடன், 5 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரைன், கட்டார், சவூதி அரேபியா ஆகிய நாடுகளிலுள்ள அமெரிக்கத் தளங்களை இலக்காகக் கொண்டு ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இந்தத் தாக்குதல்களால் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஷார்ஜாவில் மூவர் உயிரிழந்துள்ளனர். பாதுகாப்புக் கருதி டுபாய் மற்றும் குவைத் சர்வதேச விமானநிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இஸ்ரேலின் பெயிட் ஷெமெஸம் நகரம் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர், 27 பேர் காயமடைந்தனர் என்று சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்கு ஜெருசலேம் பகுதியில் ஈரான் நடத்திய மற்றுமொரு தாக்குதலில் 6 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய உதைப்பந்தாட்ட அணி சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 3

இலங்கை பாடசாலைகள் காற்பந்தாட்டச் சங்கம் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய 10 வயதுப் பிரிவினருக்கான Future Soccer Kings Challenge Trophy கிண்ணத்துக்கான போட்டியில், நடேஸ்வராக் கனிஷ்ட வித்தியாலய உதைப்பந்தாட்ட பெண்கள் அணி சம்பியன் பெற்றுள்ளது. நடேஸ்வராக் கனிஷ்ட வித்தியாலய அணி இளவாலை கன்னியர்மட பாடசாலையை 4:0 என்ற கோல் கணக்கிலும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை 4:1 என்ற கோல்கணக்கிலும் வெற்றியீட்டி மாவட்ட மட்டத்தில் சம்பியனாகியது. 40 வருடங்களுக்குப் பின்னர் காங்கேசன்துறை மண்ணிலிருந்து நடேஸ்வராக்கனிஷ்ட வித்தியாலயம், மாவட்ட சம்பியன் பெற்றதைப் பலரும் பாராட்டியுள்ளனர். (க)



## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 3

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்த புராண படனத்தொடரின் 46ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (எ-41)


# சேவைநலன் பாராட்டு

## திரு. குமாரசாமி நவராசா

பாதுகாப்பு உத்தியோகத்தர் (அதிவிசேட தரம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




**திரு.குமாரசாமி நவராசா** அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாகாப்புத் திணைக்களத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராக 07.06.1986 ல் நியமனம்பெற்று 02.03.2026 வரை முப்பத்தொன்பது (39) வருடங்கள் மிகவும் சிறப்பான முறையில் சேவையாற்றி 03.03.2026 இன்று ஓய்வுபெறுகின்றார்.

இவர் தமது ஓய்வுக்காலத்தில் உடல் உள ஆரோக்கியத்துடன் சீரும் சிறப்பும் பெற்று வாழ இறைவனைப் பிரார்த்தித்து மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**வாழ்த்துவோர்கள்:**

**ஓய்வுநிலை பாதுகாப்புப் பரிசோதகர்கள்,**
**ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்,**
**மற்றும் பாதுகாப்பு பரிசோதகர்,**
**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.**

cs 60805(N-1)

# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

## திருமதி கலைமகள் தவராஜன்

**BSc, Dip in Ed, MEd**




**ஆசிரியராக ஆற்றிய சேவைகள்**

- வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி
  11.01.1993 - 15.02.1996
- மாத்தளை பாக்கியம் தேசிய பாடசாலை
  16.02.1996 - 21.02.2000
- யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
  22.02.2000 - 11.01.2011
- யா/ யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக்கல்லூரி
  02.01.2011 - 13.06.2023
- யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
  14.06.2023 - 03.03.2026

### கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



அகவை அறுபதில் மணிவிழாக் காணும் திருமதி கலைமகள் தவராஜன் அவர்களை வாழ்த்துவதில் மிக மகிழ்வடைகின்றேன். நற்பண்புகள் பலவும் ஒன்று சேரப் பெற்ற அனுபவம் நிறைந்த உயிரியல் ஆசிரியராக மட்டுமன்றி மாணவர்களுக்கு நல்வழி காட்டியாகவும், தாய்மை எனும் உணர்வுடன் அன்பு கலந்த பாசத்தையும் வழங்கி பல புத்தி ஜீவிகளை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். இவரது ஓய்வுக்காலம் உடல், உள ஆரோக்கியத்தோடு இனிதாய் அமைய இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி C.S.R. செல்வகுணாளன்**
**அதிபர்**

### கல்லூரி பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உயிரியலை வாஞ்சையுடன் கற்பித்து பல நல்மாணாக்கரை உருவாக்கிய பெருமைக்குரிய திருமதி கலைமகள் தவராஜன் அவர்களை வாழ்த்துவதில் பேருவகை கொள்கிறேன். பல அனுபவத்தைக் கொண்டு மாணாக்கரை நெறிப்படுத்தி உயர்நிலை அடைவதற்கு ஏணிப்படியாக தனது அளப்பரிய சேவை நல்கிய சிறந்த ஆசிரியர் என இவரைக் குறிப்பிடுவது சாலச் சிறந்தது. இவரது ஓய்வுக்காலம் குடும்பத்துடன் மகிழ்ச்சி நிறைந்ததாக அமைய இறைவன் தன் அருளாசியால் நிரப்பி நீண்டகாலம் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ வேண்டுமென்று நாவாற வாழ்த்துகின்றேன்.

**திரு.க.செந்தில்வடிவேல்,**
**பிரதி அதிபர்**

### ஆசிரியர் வட்ட தலைவரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உயர்தர உயிரியல் ஆசிரியராக ஏறத்தாழ 14 ஆண்டுகளாக கடமையாற்றி இன்றைய தினம் தனது சேவையை நிறைவு செய்து கொள்கின்ற திருமதி கலைமகள் தவராஜன் அவர்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன். தமக்கென பாரிய தொரு மாணவ சமூகத்தை உருவாக்கிய பெருந்தகை. மாணவர்களுக்கு அறிவுக் கண்களைத் திறத்தலே என் பணி என்று கண்ணியமாகப் பணியை மேற்கொண்டவர். கனிவான பேச்சு எல்லோரையும் அரவணைக்கும் பண்பு உங்களின் தனித்துவம்.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

எனும் குறட் பாவிற்கேற்ப உயரிய வாழ்வு வாழ்ந்த தங்களின் ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல இறை பரம் பொருளின் ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**ஆசிரியர் வட்ட தலைவர்**
**திரு. சி. மணிமாறன்**

### பகுதித் தலைவரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் உயிரியல் பாட ஆசிரியராக ஏறத்தாழ பதினான்கு வருடங்கள் பணியாற்றி இன்றுடன் தனது சேவையை நிறைவுசெய்துகொள்கின்ற ஆசிரியர் திருமதி கலைமகள் தவராஜன் அவர்களது சேவை நயப்புக்குறித்து வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கடமை, ஒழுக்கம், விழுமியம் என்பவற்றை மாணவர்களின் மனங்களில் வேரூன்றக் காரணமானவர். மாணவர்கள் பலரை மாண்புடை மனிதர்களாகவும் உயிரியலிலே புகழ்பூத்த ஆசான்களாகவும் உருவாக்கிய பெருமையுடையவர் அத்தோடு கண்ணும் கருத்துமாக கற்பித்ததோடு மட்டுமன்றி மத்தியின் புகழ் ஓங்கவும் துணைபுரிந்தவர். இவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய இறையருள் வேண்டி வணங்குகின்றேன்.

**திரு வே. ஹரிவண்ணன்**
**பகுதித் தலைவர்**

ஆசிரியர் வட்டம் - யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05 . 04 . 1958

மறைவு
16 . 02 . 2022

## அமரர் அன்பழகி இராசேந்திரம்

அன்பான தோழமையான அம்மாவுக்கு
கிடைத்த செல்வங்கள் நாம்
அன்பையும் அறிவையும் எமக்களித்து
சுற்றம் போற்ற வாழ்ந்த எம் குல தெய்வம்
எமை விட்டு நான்கு ஆண்டுகள் சென்றாலும்
"வார்த்தைகள் கொண்டு வர்ணிக்க முடியாத
அழகிய பொக்கிஷம் அம்மா"

129, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

என்றும் அம்மாவின் நினைவுடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



மலர்வு
18 . 03 . 1947

உதிர்வு
02 . 03 . 2026

(CS/60893) J-1

## துரை இராசமணி

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும், கோண்டாவில் குமரகோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரை இராசமணி அவர்கள் நேற்று (02.03.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரை (பிரபல வர்த்தகர், ஹட்டன் டிக்கோயா) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், சரவணபவன் (பவன், வர்த்தகர்), தனராணி (Swiss), Lion. பிரணவச்செல்வன் (JP, Director of New Global Business systems), அபிராமி மணாளன் (Manager of North Power electricals) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தவமணியின் அன்புச் சகோதரியும், சதீஸ்கலா, பிரேமதாஸன் (Swiss), கௌரி (Pharmasist) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தர்மினி (Swiss), தர்சிகன் (Swiss), வைதீசன் (Swiss), நிஜந்தன் (Canada), கஜானன் (North Power electricals), நிலானி, நிஷாயினி, துளசிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அருமைநாதன் (ஓய்வுநிலை உதவி அதிபர்), லிங்கநாதன் (Canada) ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கோண்டாவில் குமரகோட்ட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
கோண்டாவில் குமரகோட்டம்
077 791 7748


## விதை உழுந்து விற்பனைக்கு

MIBG 4 இன அரச சான்றிதழ் பெற்ற
விதை உழுந்து செடி வர்க்கம் விற்பனைக்குண்டு.
1kg 900 /=

021 205 4809, 077 529 2951

(CS 60883) N-1


# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும்



தோற்றம்
10.06.1965

மறைவு
04.02.2026

## அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 04.02.2026 புதன்கிழமை அன்று
சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

## அருணாசலம் குகராஜ்

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.03.2026) புதன்கிழமை காலை 6.00 மணி யளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளைமறுதினம் (06.03.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்தி லும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
கைதடி நுணாவில்.

குடும்பத்தினர்

(CS/47152) N-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07 . 05 . 2013

மறைவு
03 . 03 . 2025

## நிகால்டான்சன் ஆர்த்திகன்

(யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆண்டு 7B மாணவன்)



ஆர்த்திகன் என்றழைத்தே
அகமகிழ்ந்து நாம் இருந்தோம்
நேர்த்தியாய் நீ வளர்ந்தாய்
நிம்மதியாய் நாம் வாழ்ந்தோம்
வாலிபத்தின் வாசலிலே
நீ வளர்ந்து வரும்வேளை
பூப்போன்ற உன்முகமும்
புன்னகையும் உன்னழகும்
கண்முன்னே தோன்றுதடா
எம்மகனே எங்கு சென்றாயோ
காற்றிலே வந்த சேதி.....
கதிகலங்க வைத்ததடா
ஏற்றிடமுடியவில்லை
ஏங்கியே தவிக்கின்றோம்
தேற்றிட யாருமில்லை ஆண்டவரின்
காலடியில்
அமைதியாக நீ உறங்க
கண்ணீரோடு விடைதந்தோம் எம்
கண்மணியே நீ உறங்கு .

கற்பக்குணை,
சுதுவில்.

குடும்பத்தினர்
077 494 0536
077 182 7825

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச்சட்டம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 3

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

டித்வா புயலின்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்டம் அவ்வப்போது நீடிக்கப்பட்ட நிலையிலேயே தற்போது மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. (ம)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 . 11 . 1972

மறைவு 14 . 03 . 2025



### அமரர் பிரியதர்சினி கனகரத்தினம்

(ஆசிரியர், யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை)

திதி : மாசிப் பூரணை (03.03.2026)

பிரியா..... எம் எல்லோருக்கும் பிரியமானவளே
பள்ளி சென்ற நீ வருவாயென
பார்த்திருக்கும் முன்னே காலனவன் கவர்ந்து சென்று
ஆண்டு ஒன்று ஆனதே இன்று
ஆறவில்லை எம் துயரம்
ஓயாத உன் நினைவுகளுடன்
ஓடுகின்றது எம் பயணம் - நீ
அன்னை தான்தோன்றியம்மன் பாதமதில்
அமைதியாக உறங்கு
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்துறை

(CS/31377) J-1

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 09 . 1935

மறைவு 26 . 02 . 2026



(CS/31375) J-1

### நாகலிங்கம் தங்கராசா

(குமரகோட்டம் ஞான வைரவர் ஆலயத்தின் முன்னாள் தலைவர்)

குமரகோட்டம் கோண்டாவிலை சேர்ந்த நாகலிங்கம் தங்கராசா அவர்கள் கடந்த (26.02.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பாசமிகு புவனேஸ்வரி (கிளி) அவர்களின் அன்பு கணவரும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, நடராசா யோகராசா, ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சரஸ்வதி, பாலசிங்கம், காலஞ்சென்ற பத்மநாதன், காலஞ்சென்ற சண்முகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பகீரதன் (பிரான்ஸ்), ஜெயகௌரி (சுமதி - பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயசொரூபி, பிரபாகரன் (பிரான்ஸ்), ஜெயகீதா (ஆனந்தி - ஜேர்மனி), சசிதரன் (இலங்கை), ஜெயவாணி(வாணி - டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூரதி (பிரான்ஸ்) திருஞானசுந்தரம் (கண்ணன் - பிரான்ஸ்), விமலினி (விஜி - பிரான்ஸ்), கிருபானந்தம் (ஜேர்மன்), கல்யாணி (இலங்கை), நிகேதன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவேதிகா நரேஸ், அஸ்வினி மெர்வை, விதுர்ஷனா, விதுர்ஷன், ஷோபி, ஆதவன் சரங்கி, ஆதங்கனி, ஆராதனி, அஸ்வன், சாய்பிரியன் ,ஜஷ்வனா, ரம்மியா, லாவண்யா, கிருசாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (04.03.2026) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
சசிகரன் - மகன் - 077 117 8612

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

விஸ்வகுல செம்மல் பசுமைப்புரட்சியாளர், சமூகஜோதி **செல்லையா கோபாலகிருஷ்ணன்**

(கிருஷ்ணா இரும்புத்தொழிற்சாலை, கிருஷ்ணமஹால் கட்டட உரிமையாளர்)



காளிகோவிலடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், மாலியவத்தை சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கோபாலகிருஷ்ணன் அவர்கள் கடந்த 27.02.2026 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மகேஸ்வரி தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் இளையமருமகனும், மனோகரி (சின்னமணி)இன் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புச் சகோதரரும், சதீஸ்குமார், நந்தகுமார் (பொறியியலாளர்), தர்மகுமார் (D.O, MOH Office, காரைநகர்), மஞ்சுளா, கிருஷ்ணகுமார், சுபாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நளினி, கவிதா, ரேவதி (D.O, பிரதேசசபை, சுழிபுரம்), வரதராஜா, பிரமிளா, வாகீசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், சுப்பிரமணியம், இரத்தினம், பாலசிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அமுதினி, சஞ்சிதா, கவிநயன், நயனா, வேதஷ்வின், அபினகா, அபிலயன், தர்ணிகா, யனுரன், பிரணவிகா, ஹரேஷ், அஜேஷ், ஆரிஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர் களான சிதம்பரப்பிள்ளை, பாக்கியம் ஆகியோரின் பெறாமகனும், நாகராணி, ஆனந்தராணி, மகேந்திரன், ஸ்ரீவரதராஜா, நாகேந்திரராஜா, செந்தில்ராஜா, மதிபாலராஜா ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.03.2026 வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னை மடியில் 18.10.1947

காளியின் அடியில் 27.02.2026

மாலியவத்தை,
சங்கானை.

cs 60894 (N-1)

தகவல்
குடும்பத்தினர்
076 679 6694

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப் பிரச்சினைக்கான தீர்வு

# தமிழ்க் கட்சிகளிடம் ஒருமித்தகருத்துகள்

கொழும்பு, மார்ச் 3

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், தமிழ்க் கட்சிகளிடத்தில் கொள்கையளவில் பொதுவான இணக்கப்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி க.ச.இரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய அரசியல் சக்திகளை ஒன்றிணைத்து நீண்டகால இனப்பிரச்சினைக்கு ஒரு நிலையான அரசியற்தீர்வை எட்டும் வகையில், தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போது சட்டத்தரணி க.ச.இரத்தினவேல் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைச் சிதையாமல் பாதுகாப்பதற்கும், சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டிலும் ஒருமித்த குரலில் கோரிக்கைகளை முன்வைப்பதற்கு இவ்வாறானதொரு மேடை அவசியமாகின்றது. வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்றக் கட்சிகள் யாவும் ஒரு சில முக்கியமான விடயங்களில் ஒருமித்த கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்தச் சந்திப்பானது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு மூடிய அறை கூட்டமாக அமைந்திருந்ததுடன் அங்கு பகிரப்பட்ட கருத்துக்கள் அந்தந்த அரசியல் கட்சிகளின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாகக் கருதப்படும். மிக விரைவில் மீண்டும் கூடி பிரதானமான பல முக்கிய முடிவுகளை எடுப்போம் - என்றார். (ம)

# குவைத்தில் வீழ்ந்த அமெ. போர் விமானம்

குவைத், மார்ச் 3

குவைத்தில் அமெரிக்கப் போர் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

அலி அல் சலேம் அமெரிக்கத் தளத்திலிருந்து சுமார் ஆறு மைல் தொலைவில், இந்த விமானம் தீப்பற்றி எரிந்தவாறு கீழே விழும் காட்சி காணொளிகளில் பதிவாகியுள்ளது.

விமானி விமானத்திலிருந்து குதித்துப் பாதுகாப்பாகத் தரையிறங்கியுள்ளார். எனினும், விமானத்திலிருந்த ஆயுதக் கட்டமைப்பு இயக்குநரின் நிலைமை தொடர்பாக இதுவரை எவ்விதத் தகவல்களும் வெளியாகவில்லை. இந்த விமானம் விபத்துக்குள்ளானமைக்கான காரணம் ஈரான் ஏவுகணைத் தாக்குதலா அல்லது இயந்திரக் கோளாறா என்பதும் கண்டறியப்படவில்லை. (ஏ-இ)

## நாடாளுமன்றம்...

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலுக்குள் பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் சிக்கியுள்ளனர். எனவே, அவர்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தின் இன்றைய அமர்வில் பிரதானமாகப் பேசப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், இந்தப் போர்ப்பதற்றங்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும் நாடாளுமன்றில் இன்று உரையாற்றவுள்ளார் என்று தெரியவருகின்றது.

மத்திய கிழக்கில் சிக்கியுள்ள இலங்கையர்களின் நிலை தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று விசேட கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்துள்ளார். எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்த அவசர கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு சில பரிந்துரைகள் முன்வைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## மூன்றாம்...

அதிகம் உள்ளன என்று, சர்வதேச போரியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா இஸ்ரேல் இணைந்து முன்னெடுத்த தாக்குதலுக்குப் பதிலடியாக, மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகள் ஈரானால் தாக்கப்பட்டு வருகின்றன. சிவில் கட்டடங்களும் இலக்கு வைக்கப்படுவதால், வளைகுடா நாடுகள் ஈரானைத் திருப்பித் தாக்கத் தீர்மானித்துள்ளன. இது தொடர்பில் வளைகுடா நாடுகளால் ஈரானுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஈரானுக்கு எதிரான போரில் அமெரிக்காவுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக ஜேர்மனி அறிவித்துள்ளது. ஈரானை அமெரிக்கா தாக்குவதற்காக தனது இராணுவத் தளங்களைப் பயன்படுத்துவதற்கு பிரிட்டனும் அனுமதி வழங்கியுள்ளது. இதையடுத்தே, இது மூன்றாம் உலகப்போராக மாறிவருவதாக சர்வதேச போரியல் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இந்தப் போரில் ரஷ்யா இதுவரை நேரடியாக ஈடுபடவில்லை. எனினும், அமெரிக்காவின் தாக்குதலால் ஈரானில் ஒரு ரஷ்யர் கொல்லப்பட்டாலும், தாம் களத்துக்கு வருவோம் என ரஷ்ய அதிபர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## மிச்சம்மீதி...

அயதுல்லா அலி கொமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஆட்சியைப் பொறுப்பேற்றுள்ள நபர்கள், தம்முடன்பேச்சுவார்த்தை நடத்தத்தயாராக உள்ளனர் என்று அதிபர் ட்ரம்ப் நேற்றுத் தெரிவித்திருந்தார். அதிபர் ட்ரம்பின் கருத்தை மறுத்துள்ள ஈரானின் தேசிய பாதுகாப்புச் சபை, டெல் அவிவ் நகரம் முற்றாக அழிக்கப்படும் என்று கூறியுள்ளது.

ஈரானிய தேசியப் பாதுகாப்புச்சபை மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் இன்னொரு பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு நாங்கள் தயாராக இல்லை. அத்தகைய அவசியம் எதுவும் எமக்கு ஏற்படவில்லை. அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பொய்கள் மூலம் அமெரிக்கப் படையினரின் உயிர்களை விலையாக்கி வருகின்றார்.

எமது உச்ச தலைவரின் குருதி வீணாகச் சிந்தப்படவில்லை. மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களில் கணிசமானவை அழிக்கப்பட்டுவிட்டன. அதுபோல் இஸ்ரேலின் டெல்அவிவ் நகரம் சுக்குநூறாக நொறுக்கப்பட்டு வருகின்றது. அவை அனைத்தும் மிச்சம் மீதி இல்லாமல் அழிக்கப்படும் - என்றார். (அ-ம)

## இளைஞரின்...

தனித்து வாழ்ந்துவந்த அவரின் வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்து, பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமையவே சடலம் மீட்கப்பட்டுள்ளது. அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் மரண விசாரணைகளை முன்னெடுத்தார். சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-100)

## முல்லை...

ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா, வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராசா உள்ளிட்டவர்கள் பிரதம நீதியரசரை வரவேற்றனர். தொடர்ந்து, மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள், உத்தியோகத்தர்கள் முன்னிலையில் பிரதம நீதியரசர் உரையாற்றினார். (அ-ம-19)

## வடக்கில்...

அதிகாரிகள் தெரிவித்துள்ளன. மத்திய கிழக்கு மோதலைத் தொடர்ந்து, வடமாகாண மக்கள் பெருமளவில் எரிபொருளைக் கொள்வனவு செய்து வருகின்றனர். இதனால், எரிபொருள் வரிசைகள் உருவாகியதுடன் செயற்கைத் தட்டுப்பாடும் தோன்றியது. இவ்வாறான நிலையிலேயே, வடக்கு மாகாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்று பெற்றோல் விநியோகம் தாராளமாக இடம்பெற்றுள்ளது. இன்றும் விநியோகம் தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-17)

## எரிபொருள்...

விநியோகம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்காக கொழும்பில் இருந்து நேற்று இரவு எரிபொருள் தாங்கிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், அவை இன்று காலை யாழ்ப்பாணத்தை வந்தடையும் என்றும் கூறப்படுகின்றது. (அ-ம-17)

## ஆக்கிரமிப்பு...

போராட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் ஆரம்பமானது. இதன் தொடர்ச்சியாகவே நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இந்தப் போராட்டம்முன்னெடுக்கப்பட்டது.

திஸ்ஸ விகாரை ஆக்கிரமிப்பில் காணிகளை இழந்தவர்கள், தமிழ்த் தேசிய முன்னணியினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தை முன்னிட்டு பொலிஸாரின் பாதுகாப்பும், புலனாய்வுக் கண்காணிப்பும் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## 150 வீத...

வித்துள்ளது. மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழல் காரணமாக மக்கள் எரிபொருள்களைக் கொள்வனவு செய்வது அதிகரித்துள்ளது. இதையடுத்தே, எரிபொருள் விநியோகத்தை ஒன்றரை மடங்கால் அதிகரித்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-17)

## தீவிர...

ரிவு அறிவித்துள்ளது. இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைய நாட்டின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மறு அறிவித்தல்வரை இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கொள்கலன்கள், போத்தல்கள் என்பவற்றில் பெற்றோலை நிரப்புவது தடை செய்யப்பட்டுள்ளது. மண்ணெண்ணெயை ஆகப்பெரும் கொள்கலன்களில் நிரப்ப வேண்டாம் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தல்களை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது. (அ-ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளுக்கான வரிசைகளால் பொதுப்போக்குவரத்துக்கு ஆபத்து

## இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 3
எரிபொருளுக்கு நீண்ட வரிசைகள் உருவாகுமானால், பொதுப் போக்குவரத்துச் சேவையை முன்னெடுத்துச் செல்வது கடினமாகும். பேருந்துச் சேவை முடங்காமல் இருக்க இலங்கை போக்குவரத்துச்சபையின் எரிபொருள் நிலையங்கள் ஊடாகத் தடையின்றி டீசல் வழங்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன வலியுறுத்தியுள்ளார். நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள இப்போதே முறையான திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுப்பது அவசியம். கடந்த காலங்களில் எரிபொருள் விநியோகத்தை ஒழுங்குபடுத்தப் பயன்படுத்தப்பட்ட கியூ.ஆர். முறைமையை மீண்டும் நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதாக இருக்கும். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நீண்ட வரிசைகள் உருவாகுமானால், தனியார் பேருந்துகள் மணித்தியாலக் கணக்கில் அல்லது நாள் கணக்கில் அந்த வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறு நடந்தால் பொதுப்போக்குவரத்துச் சேவையை முன்னெடுப்பது கடினமாகும்-என்றார். (எ-இ)

# அமெரிக்காவுடன் பேசும் திட்டம் எதுவும் இல்லை!

## ஈரான் திட்டவட்டம்

ஈரான் தன்னைத்தானே தற்காத்துக்கொள்ளும் என்றும் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தமாட்டோம் என்றும் ஈரானின் தேசிய பாதுகாப்புத் தலைவர் அலி லாரிஜானி தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் தனது, 'தவறான நம்பிக்கைகளால்' இந்தப் பிராந்தியத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளார். அமெரிக்கத் துருப்புக்களுக்கு உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்று இப்போது அவர் கவலைப்படுகிறார் என்றும் அலி லாரிஜானி தெரிவித்துள்ளார். தனது ஆளுமையை நிலை நாட்டிக்கொள்வதற்கான விலையை, அமெரிக்க வீரர்கள் மற்றும் குடும்பங்கள் மீது சுமத்து கிறார். இன்று, ஈரான் தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்கின்றது. ஈரானிய ஆயுதப்படைகள் படையெடுப்பைத் தொடங்கவில்லை. நாங்கள் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தமாட்டோம் என்று அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (எ-இ)

# கியூ.ஆர். முறைமைக்கு இப்போது அவசியமில்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 3
எரிபொருள் விநியோகத்தில் தற்போது எந்தத் தடங்கலும் இல்லாததால் கியூ.ஆர். முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டிய தேவை ஏற்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாடு எதிர்கொண்டிருந்த எரிபொருள் நெருக்கடி காரணமாக எரிபொருள் நுகர்வைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்ததாலேயே கடந்த காலங்களில் கியூ.ஆர். முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது எரிபொருள் விநியோகத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை. போதுமான எரிபொருள் கையிருப்பு உள்ளது. எதிர்காலத்தில் தேவை ஏற்பட்டால் கியூ.ஆர். முறைமையை மீண்டும் அறிமுகப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலிக்கும்-என்றார். (எ-இ)

**காணி குத்தகைக்கு தேவை**
கோண்டாவில், இணுவில், உரும்பிராய் போன்ற பிரதேசங்களில் பிரதான வீதியை அண்மித்ததாக உள்ள காணி குத்தகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:- 077 959 2628

**அறை வாடகைக்கு**
யாழ் நகருக்கு அருகாமையில் மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.
077 518 9176
(CS/60892) J-1

# மரண அறிவித்தல்

# பொன்னையா பவளம்



மலர்வு 14.01.1941 — உதிர்வு 02.03.2026

புங்குடுதீவை (10ம் வட்டாரம்) பிறப்பிடமாகவும் இல.04 பழங்கிணற்றடி பிள்ளையார் கோவில் வீதி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பவளம் அவர்கள் நேற்று (02.03.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரன் (கனடா), ஸ்ரீகௌரி, ஸ்ரீநளாயினி (சுவிஸ்), தவக்குமார் (சுவிஸ்), சுதர்சினி (சுவிஸ்), பகீரதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகலதா, இராசலிங்கம், பாஸ்கரன், ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற செந்தில்குமரன் மற்றும் கமலினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் மகேஸ்வரி, மாயாவதி, காலஞ்சென்றவர்களான வரலட்சுமி, சடாச்சரதேவி மற்றும் தியாகராசா, காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகம், தங்கேஸ்வரன் மற்றும் பேரின்பமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிருந்தாபன், பிரசன்னா, பிரியதர்ஷன், பிரசாந்தி (DO பிரதேசசெயலகம் - சங்கானை), கிருஷாந்தி (ஆசிரியர் - கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்), அபிநிஷா, ஆதர்ஷா, புபாசன், வேலவன், லாவண்யா, லபீசன், மதுசன், சபீசன், அஜீஸ், அதிஸ்ரா, பவீனா, சாருண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரவீன், லகீஷா, லவீனா, அமிர்தவி, சகீர்த்தியா, பிரஜின், டர்ஜித், இலக்கியன். அபிநயன், அக்ஷரன், அகன்ஜன், ஷாயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலம் இந்துமயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.04, பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோவில் வீதி,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்
குடும்பத்தினர்
021 222 0471
076 554 6324
077 226 3904

cs 60896 (N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org